செயலாற்றுகை அறிக்கை

2011



கல்வி வெளியிட்டுத் திணைக்களம்

உள்ளடக்கம்

	பக்கங்கள்
அறிமுகமும் பின்னணியும்	1
தொலை நோக்கும் - பணிக்கூற்றும்	2
ஒழுங்கமைப்புக் கட்டமைப்பும் - நிருவாக ஒழுங்கும்	3 - 4
தாபனப் பிரிவு	5 - 8
அபிவிருத்திப் பிரிவு	9 - 16
தகவல் தொழிநுட்பப் பிரிவு	17
உற்பத்திப் பிரிவு	18 - 19
வெளியீட்டுப் பிரிவு	20
விநியோகப் பிரிவு	21 - 23
நிதிப் பிரிவு	24 - 26
2011 முன்னேற்றத்தை காட்டும் சுட்டி	27 - 30
புதிய பிரவேசங்கள	31
சுருக்கம்	32 - 33

இணைப்புக்கள்

1. பாடநூல்களைச் சிறப்பாகப் பேணியதற்காக வழங்கப்படும் சான்றிதழ். (சிங்கள மொழிமூலம்)
2. பாடநூல்களைச் சிறப்பாகப் பேணியதற்காக வழங்கப்படும் சான்றிதழ். (தமிழ் மொழிமூலம்)
3. பாடநூல் கோரல் படிவம் - நேரடி விநியோகம்.
4. பாடநூல் கோரல் படிவம் - மத்திய நிலையமூடாக.
5. மத்திய நிலையத்துக்கான பாடநூல் கோரல் படிவம்.

1. அறிமுகமும் பின்னணி விபரங்களும்

அறிமுகம்

கல்வி வெளியீட்டுத் திணைக்களமானது கல்வி அமைச்சின் கீழ் இயங்கும் உயர் தரத்திலானதொரு திணைக்களமாகும் அரசினால் பாடசாலை பாடநூல்களை இலவகமாக விநியோகிக்கும் தேசிய கொள்கையை அமுல் நடத்துவதே இத்திணைக்களத்துக்கு வழங்கப்பட்டுள்ள பிரதான பொறுப்பாகும்

இதற்கு மேலதிகமாக க.பெ.த. உயர் தர மற்றம் மேல்பட்ட பரீட்சைகளுக்கான தரமான வாசிப்பு நூல்களை வெளியிடல் ஏனைய கற்றல் சாதனங்களை உற்பத்தி செய்வதன் மூலம் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை அர்த்தமுள்ளதாக ஆக்குவதற்கு பங்களிப்பு செய்தல் என்பன இத்திணைக்களத்தின் செயற்பாட்டுக்குட்பட்டவையாகும்.

பின்னணி

1965 மார்ச் 27 ஆம் திகதி அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் கல்வி வெளியீட்டுத்திணைக்களமானது நிதி அமைச்சின் கீழ் தனியான செலவு பிரிவொன்றாக தாபிக்கப்பட்டது மேலும் 1966 செப்டம்பர் 30 திகதியன்று இலங்கை அரசின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் கல்வி வெளியிட்டுத் திணைக்களமானது அதற்குரித்தான கல்வி மற்றும் கலாச்சார அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டது.

1966 ஆம் ஆண்டு மேற் கூறப்பட்ட வர்த்தமானி அறிவித்தலினால் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்கு கீழ் வரும் பொறுப்பக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

- ஆரம்ப, இரண்டாம் தர, உயர் கல்வி பயன் பாட்டுக்காக அனுமதிக்கப்பட்ட பாடநூல்களை மொழிப் பெயர்த்தல், பகிரங்கப் படுத்தல், விநியோகித்தல் மற்றும் விற்பனை செய்தல் வெளியீட்டு உரிமையை (கொள்வனவு செய்தல்) பணங் கொடுத்து வாங்குதல்.

- குல்வி நடவடிக்கைக்கு தேவையான பாடநால்கள், அகராதிகள், களைச்சொற்றொகுதிகள் வேறு நூல்களை உற்பத்தி செய்தல், பகிரங்கப் படுத்தல், விநியோகித்தல் மற்றும் விற்பனை செய்தல்

- மாணவர துணைச்சாதணங்களை கற்புல – செவிப்புல மற்றம் சாதனங்களை உற்பத்தி செய்தல் விநியோகித்தல் மற்றும் விற்பனை செய்தல்

- வாசித்தல் சாதன உற்பத்தியை ஊக்குவித்தல்

B தரத்திலான ஒரு திணைக்களமாக உருவாக்கப்பட்ட கல்விவெளியீட்டுத் திணைக்களமானது 2004.07.14 திகதியன்று உயர்தரமாக்கப்பட்டதுடன் கல்வி வெளியீட்டு ஆணையாளர் எனும் பதவி கல்வி வெளியீட்டுஆணையாளர் நாயகம் என உயர்த்தப்பட்டதுடன் இம் முக்கிய வேறுபாட்டை மையமாக கொண்டு கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகத்தின் நிலைப்பாடானது கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் நிலைக்குஉயர்வடைந்தது.

2. தொலை நோக்கும் பணிக்கூற்றும்

தொலை நோக்கு

சர்வதேச கல்வி அபிவிருத்தியுடன் இனைந்த உயர்தரத்திலான பாடநூல்களை உருவாக்குவதன் மூலம் அனைவருக்கும் கல்வியை பெற்றுக் கொடுப்பதை உருதி செய்தல்.

பணிக் கூற்று

இலவசப் பாடநூல் விநியோகம் எனும் அரசின் தேசிய கருத்திட்டத்தைச் செயற்படுத்துவதுடன் கல்விச் செயற்பாட்டிற்குத் தேவைப்படும் ஏனைய பாடநூல்கள் செயல்நூல்கள் மொழிப்பெயர்ப்பு நூல்கள் கலைச் சொல் அகராதிகள், மேலதிக வாசிப்பு நூல்கள், சொற்களஞ்சியங்கள் உட்பட ஏனைய கட்புல – செவிப்புல துணைச்சாதனங்களை உற்பத்தி செய்து விநியோகிப்பதனால் கல்வித்தரத்தை அபிவிருத்தி செய்வதன் மூலம் நாட்டுக்கு செயற்றிறன் மிக்கதும், பண்பும் அறிவும் மிக்கதுமான பிரஜைகள் குழு ஒன்றை உருவாக்கவதில் பங்களிப்புச் செய்தல்.

3. கல்வி வெளியீட்டுத்திணைக்களத்தின் ஒழுங்கமைப்புக் கட்டமைப்பும் - நிர்வாக ஒழுங்கும்

கல்விவெளியீட்டுத்திணைக்களத்தின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தராக செயற்படும் கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகத்திற்கு நிருவாக செயற்பாடுகளில் இலங்கை கல்வி நிருவாக சேவை உத்தியோகத்தரான ஆணையாளர்கள் இருவரதும் பிரதி – உதவி ஆணையாளர்கள் 24 பேரினதும் ஒத்துழைப்பு கிடைக்கின்றது. நுிதிப்பிரிவுக்கு பொறுப்பாக பிரதான கணக்காளர்களாகஇலங்கை கணக்காளர் சேவை 1ஐச் சேர்ந்த ஓர் அதிகாரியும் 2 ஐச் சேர்ந்த ஒரு அதிகாரியும் செயற்படவதுடன் உள்ளக கணக்காய்வு பிரிவுக்குப் பொறுப்பாக கணக்காளர் சேவை தரம் 1ஐச் சேர்ந்த ஒரு அதிகாரியும் சேவையாற்றுகின்றனர்.

நிருவாக இலகுபடுத்தலின் நிமிர்த்தம் திணைக்களமானது நிருவாகப்பிரிவு, அபிவிருத்திப் பிரிவு, உற்பத்திப் பிரிவு, விநியோகப் பிரிவு, நிதிப்பிரிவு, என பிரதான 5 பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

திணைக்களத்தின் ஒழுங்கமைப்புக் கட்டமைப்பானது மறுபக்கத்தில் காட்டப்பட்டுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது

கல்வி வெளியீட்டுத்திணைக்களத்தின் ஒழுங்கமைப்பு கட்டமைப்பு



4. தாபனப் பிரிவு

தாபனப் பிரிவின் முதன்மை கருமம் திணைக்களத்தின சாதாரண நிருவாகமும் மற்றம் அனைத்து ஊழியர்களையும் நிருவன நடவடிக்கை தொடர்பான அரச கரும நடவடிக்கைகளை நிறைவு செய்தலுமாகும்.

2011.12.31 திகதியன்று திணைக்கள உத்தியோகத்தர்களின் ஒழுங்கமைப்பு கீழ்வருமாறு.

பதவி	உரிய சேவை	வகுப்பு / தரம்	அனுமதிக்கப் பட்ட உத்தியோகத் தர் தொகை	தற்போதுள்ள தொகை	பதவி வெற்றிட தொகை
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்	இ.க.நி.சே	I	01	01	-
ஆணையாளர்	இ.க.நி.சே	I	02	02	-
பிரதான கணக்காளர் கணக்காளர்	இ.க..சே இ.க..சே	I II/II	01 01	01	- - 01
பிரதி ஆணையாளர் உதவி ஆணையாளர்	இ.க.நி.சே	I/II III	38	24 01 (வெளிநாட்டில் சம்பளமற்ற லீவு)	13
உதவி ஆணையாளர் (தகவல் தொழிநுட்பம் முறைமை பகுப்பாய்வாளர்)	இ.த.அ.தொ.நு.சே	III	01	01	-
நிருவாக உத்தியோகத்தர்	இ.மு.உ.சே	உயர் தரம்	01	01	
விற்பனை முகாமையாளர்	திணைக்களத்தினால்		01	01	-
மொழி பெயர்பாளர்	திணைக்களத்தினால்		01	-	01
கணனி பக்க அமைப்பாளர்	திணைக்களத்தினால்		06	-	06
அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை	அ.மு.உ.சே அ.மு.உ.சே அ.மு.உ.சே	I II III	53	10 13 18	09
நூலகர்	நூலகர் சேவை	III	01	01	-
அபிவிருத்தி உதவியாளர்	கிட்டிய சேவை		20	04	16
நிதி உதவியாளர் வரவு செலவுஉதவியாளர்	கிட்டிய சேவை		01 01	01 01	-
சாரதி	சாரதிமார் சேவை	I II 'அ' II 'ஆ'	12	02 02 05	03
காரியாளலய ஊழியர் சேவை	கா.ஊ.சே	I II III	15	- 03 01	11
விற்பனை உதவியாளர்			15	09	06
களஞ்சியசாலைக் காவலாளர்	முதனிலை சேவை		07	06	01
களஞ்சியசாலை ஊழியர்	முதனிலை சேவை		35	27	08
ஆய்வு கூட ஊழியர்	முதனிலை சேவை		01	01	-
நூலக ஊழியர்	முதனிலை சேவை		01	01	-
மொத்தம்			**215**	**140**	**75**

2011 ஆம் ஆண்டினுள் மாற்றம் பெற்று வந்த உத்தியோகத்தர்

பதவி	தரம்	மாற்றம்பெற்று வந்தோர்தெகை
1. இலங்கை கணக்காளர் சேவை	Iம் வகுப்பு	01
2. இல.க.நி.சே	IIIம் வகுப்பு	01
3. அபிவிருத்தி உதவியாளர்	-	04
4. நிதி உதவியாளர்	-	01
5. அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை	I ம் வகுப்பு	04
6.அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை	II ம் வகுப்பு	01
7.அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை	III ம் வகுப்பு	03
5. சாரதி	Iம் வகுப்பு	01
	IIம் வகுப்பு	02
	II ம் வகுப்பு	02

2011 ஆம் ஆண்டிற்குள் மாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்

பதவி	வகுப்பு	உத்தியோகத்தர் தொகை
1. இலங்கை கணக்காளர் சேவை	Iம் வகுப்பு	02
2. இல.க.நிருவாக சேவை	III ஆம் வகுப்பு	03
3. அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை	IIம் வகுப்பு	01
4. சாரதி	IIம் வகுப்பு	01

2011 ஆம் வருடத்தள் பதவி உயர்வு பெற்ற உத்தியோகத்தர்

பதவி			உத்தியோகத்தர் தொகை
1. இல.க.நிறுவாக சேவை	III வகுப்பிலிருந்து	II ஆம் வகுப்புக்கு	01
2. களஞ்சிய ஊழியர்	II வகுப்பிலிருந்து	I ஆம் வகுப்புக்கு	03

2011 ஆம் வருடத்தள் ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்

பதவி	உத்தியோகத்தர் தொகை
1. அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை I	02
2. விற்பணை உதவியாளர்	01
3. சாரதியாளர் சேவை	02
4. களஞ்சியக் காவலாளர்	01

2011 ஆம் வருடம் புதிதாகப் பதவியேற்றோர்

பதவி	**உத்தியோகத்தர் தொகை**
1. இலங்கை நூலகர் சேவை III	01
2. அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை III	02

2011 ஆம் வருடத்துள் வெளிநாட்டு பயிற்சிகள்

1. உலக வங்கியின் அபிவிருத்தி நிதியின் கீழ் வழங்கப்பட்ட ஒதுக்கீட்டின் மூலம் 2011.02.21 ஆம் திகதி முதல் 2011.03.02 வரை தாய்லாந்தில் பாடநூல் பதிப்பித்தலுடன் தொடர்பான வெளிநாட்டுப் பயிற்சி நெறியில் கணக்காளர் சேவை II ஆம் தர அதிகாரி யொருவரும் இ.க.நி.சே. III ஆம் தர அதிகாரிகள் அறுவரும் கலந்து கொண்டுள்ளன.

2. திணைக்கள நிதியின் மனிதவள செலவு தலைப்பின் கீழ் வேறாக்கப்பட்டுள்ள ஒதுக்கின் மூலம் 2011.12.12 திகதி முதல் 2011.12.20 திகதி வரை இந்தியாவின் புதுடில்லி நகரில் பாடநூல் உற்பத்தி தொடர்பான வெளிநாட்டுப் பயிற்சி செயலமவர்வில் க.வெ.ஆ.நாயகமும் இ.க.நி.சே IIஆம் தர அதிகாரி ஒருவரும் III ஆம் தர அதிகாரிகள் மூவரும் கலந்து கொண்டனர்.

3. திணைக்கள அதிகாரிகளின் கொள்திறன் கட்டுமானச் செலவு தலைலைப்பின் கீழான ஒதுக்கின் மூலம் 2011.12.26 திகதி முதல் 2011.12.31 திகதி வரை இந்திய புதுடில்லி நகரில் பாடநூல் பதிப்பு செய்தல் தொடர்பிலான வெளிநாட்டுச் செலமவர்வில் இ.த.நி.சே I ஆம் தர அதிகாரிகள் இருவரும் , II ஆம் தர அதிகாரிகள் இருவரும், III ஆம் தர அதிகாரிகள் ஐவரும் பங்கேற்றுள்ளனர்.

அபிவிருத்தி பிரிவு

நடைமுறை உலகின் புதிய போக்குகளுக்குப் பொருந்தும் வித்தில் தேசிய கல்வி நிறுவகம் மூலம் வடிவமைக்கப்படும் பாடதிட்டம் மற்றும் விதந்துரைப்புக்களுக்கேற்ப பாடநூல்களை ஆக்குவதும் மீள்பதிப்பு செய்யப்படும் பாடநூல்களின் தர மேம்பாட்டின் பொருட்டு பல்வேறு உத்திகளையும் திட்டமிட்டு நடைமுறைப்படுத்துவதுமே கல்வி வெளியீட்டு திணைக்களத்தின் அபிவிருத்திப் பிரிவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பிரதான பொறுப்பாகும்.

இதற்கு மேலதிகமாக உயர் பரீட்சைகளுக்கு தோற்றுகின்ற மாணவர்களுக்கு அறிவைப் பெற்று கொடுக்கக் கூடிய மேலதிக நூல்களை இயற்றுவதும் க.வெ.திணைக்களத்தின் அபிவிருத்திப் பிரிவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள மற்றுமொரு பொறுப்பாகும்.

அபிவிருத்திப் பிரிவுக்குப் பொருப்புள்ள ஆணையாளரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று பிரிவுகள் செயற்படுகின்றன. 2011 ஆம் வருடத்திற்கான பாடநூல்கள் ஆக்கப்பட்டது பாடப் பொறுப்பளரகள் மற்றும் உதவி ஆணையாளர்கள் 24 பேரின் பங்களிப்புடனேயாகும்.

2007 ஆம் வருடம் முதல் பாடசாலைகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட தேர்ச்சிமைய பாடத்திட்டத்தை மையமாகக் கொண்டு இன்று வரை பாடநூல்கள் ஆக்கப்படுகின்றன. 2011 ஆம் ஆண்டினுள் பிரிவெனா நூல்களை நிகழ்நிலைப் படுத்துவதில் விசேட கவனம் செலுத்தப்பட்டது. இதன் படி 2011 ஆம் ஆண்டினுள் தரம் 1-5 வகுப்புக்களுக்கான பாளி, சமஷ்கிருதம், சிங்களம், சமுகவியல், திரி பீடக தர்மம், வரலாறு மற்றும் தமிழ் மொழி போன்ற பாடங்களுக்காகப் புதிய பிரிவெனா நூல்கள் ஆக்கப்பட்டன. (இதற்குமுன்னர் திழ் மொழி நூலொன்று பிரிவெனாவுக்கென ஆக்கப்படாதிருந்ததுடன் இந்த வருடத்தில் அதனை சாத்தியமாக்கக் கிடைத்தமை வெளியீட்டு திணைக்களத்திற்கு கிடைத்த வெற்றியாகும்)

அபிவிருத்திப் பிரிவானது சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழி மூலங்களிளும் நூல்களை ஆக்குவதில் ஈடுபடுகின்றது. அத்துடன் இருமொழிக் கல்வி கொள்கையை உறுதிப்படுத்துவதை நோக்காகக் கொண்டே எல்லா செயற்திட்டங்களும் நடைமுறைப் படுத்தப்படுகின்றன. மூன்று மொழி மூலங்களிலுமுள்ள பாடநூல்களின் தரத்தை மேம்படுத்துவதன் நிமித்தம் 2010 இல் நடைமுறைப்படுத்தப்பட்ட பல்வேறு செயற்பாடுகள் மற்றும் திட்டங்கள் என்பன மேலும் முன்கொண்டு செல்லப்பட்டன. மேலும் மொழி முல அடிப்படையில் பாடநூல்களிடையே ஒருமைப்பாட்டை ஏற்படுத்தல், மற்றும் இனம், சமயம் வேறு காரணங்களினால் பாடநூல்களில் காணப்படக்கூடிய பல்வேறு குறைப்பாடுகளை நீக்குவதுடன் பாடவிடயங்களை நிகழ்நிலைப்படுத்தல் என்பன 2011 ஆம் ஆண்டில் திணைக்களத்தின் விசேட கவனத்தில் கொள்ளப்பட்டன.

2011 ஆண்டினுல் நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்பாடுகள்

01. கல்வி வெளியீட்டுத் திணைக்களம் மூலம் ஆக்கப்பட்ட பாடநூல்களின் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு 2011 ஆம் ஆண்டுக்குள் பல்வேறு விடயங்கள் நடைமுறைபபடுத்தப்பட்டன. அவை விபரமாக கீழ் வறுமாறு.

- 2012 ஆம் ஆண்டுக்காக அச்சிடப்பட்டுப் பாடநூல்களின் தர மேம்பாட்டின் பொருட்டு கல்வித் துறையின் பலவேறு மட்டங்களிலுமான வளவாளர்களின் பங்களிப்புடன் பாடநூல் பதிப்புச் செயலமர்வுகள் 08 நடாத்தப்பட்டன. நடாத்தப்பட்ட செயலமர்வுகள் தொடர்பான சுருக்க அட்டவனையை மறுபக்கத்தில் காணலாம்.

இலக்கம்	நாட்கள்	செயலமர்வு நடந்த பாடங்கள்	கலந்து கொண்டோர் தொகை
01	2011/02/08, 09, 10, 11	கணிதம் (சி / த/ ஆ) விஞ்ஞானம் (சி / த/ ஆ) புவியியல் (சி / த) வர்தகமும் கணக்கியலும்(சி / த/ ஆ) மனைப் பொருளியல் (சி) பௌத்தம்	85
02	2011/02/22, 23, 24, 25	கிறிஸ்தவம் (சி / த) கத்தோலிக்கம் (சி / த) வரலாறு (சி / த) இரண்டாம் மொழி (சி) குடியுரிமைக் கல்வி (சி / த) ஆங்கிலம் செ.தொ.தி (சி / த) சுகாதாரம் (சி / த/ ஆ) முயற்சியாண்மைகற்கை (சி / த) மனைப்பொருளியல் (சி / த) சைவநெறி (த) புவியியல்(ஆ)	129
03	2011/03/03,04	பௌத்தம் கணிதம் (சி / த/ ஆ) விஞ்ஞானம் (சி / த/ ஆ) மனைப் பொருளியல்	44
04	2011/03/10, 11	சுகாதாரம் (சி / த) கத்தோலிக்கம் (த) செ.தொ.தி (சி) ஆங்கிலம் குடியுரிமைக் கல்வி (சி)	34
05	2011/03/21,22, 23,24, 25	விஞ்ஞானம் (சி / த) இரண்டாம் மொழி (சி) புவியியல் (சி / த) கணிதம் (சி / த) மனைப் பொருளியல் (சி / த) வர்தகமும் கணக்கியலும் (சி / த) வரலாறு (சி / த) சுகாதாரம் (த)	42

06	2011/03/22, 23, 24, 25	பௌத்தம் இஸ்லாம் (சி) சிங்கள மொழியும் இலக்கியமும் தமிழ் மொழியும் இலக்கியமும் தகவல் தொடர்பாடல் தொழினுட்பம் (சி) விவசாயமும் உணவு தொழிநுட்பமும் (சி/த) மீன்பிடியும் உணவு தொழிநுட்பமும் (த) தகவல் தொடர்பாடல் தொழிநூட்பம் (த) இரண்டாம் மொழி தமிழ் தமிழ் இலக்கிய நயம் வடிவமைப்பும் தொழிநுட்பவியலும் (சி/த)	69
07	2011/03/30, 31	சுகாதாரம் விவசாயமும் உணவு தொழிநுட்பமும் (த) இரண்டாம் மொழி தமிழ் சிங்கள மொழியும் இலக்கியமும் விஞ்ஞானம் (த) வரலாறு (த) கிறிஸ்தவம் (சி/த) தகவல் தொடர்பாடல் தொழிநூட்பம்	43
08	2011/04/05, 06, 07, 08	பௌத்தம் விஞ்ஞானம் (சி/த) சுகாதாரம் (சி/த) பிரயோக தொ.நு திறன் (சி/த) வர்தகமும் கணக்கியலும் (சி/த) வரலாறு (சி/த) புவியியல் (சி/த) வாழ்க்கைதேர்ச்சியும் குடியுரிமைக்கல்வியும் (சி/த) கிறிஸ்தவம் (சி/த) கத்தோலிக்கம் (சி/த) சிங்களம் கணிதம் (சி/த.்.ஆ) இஸ்லாம் (சி/த) தகவல் தொடர்பாடல் தொழிநூட்பம் (சி/த) சைவ நெறி தமிழ் மொழியும் இலக்கியமும்	100

- இச் செயலமர்வுகளின் போது குறிப்பிட்ட நூல்களின் விடயதானம் மொழிப் பிழையின்மை போன்றவற்றில் விசேட கவனம் செலுத்தப்பட்டது. அத்துடன் விடயதானங்களை நிகழ் நிலைப்படுத்துவதுடன் பொறுத்தமற்ற வியங்களை நீக்குவதும் இடம்பெற்றன.

- பாடநூல்களின் தர மேம்பாட்டின் பொருட்டு மேற்கொள்ளப்பட வேண்டிய மாற்றங்களை இனங்கான்பதற்காக நியமிக்கப்பட்ட வளவாளர் குழுவின் - வளவாளர்கள் பாட அடிப்படையில் பிரிக்கப்பட்டுள்ள முறையை காட்டும் அட்டவணை வருமாறு.

தொடர் இல	பாடங்கள்	ஆசிரியர் நிலையம்/ ஆசிரியர் கலாசாலை/ கல்வியியல் கல்லூரி/	பல்கலைக் கழகப் பேராசிரிர்கள்/ விரிவுரையாளர்கள்	கல்விப் பணிப்பாளர்கள்	அதிபர்கள் / பிரதி அதிபர்கள்	ஆசிரியர்கள்	ஆசிரிய ஆலோசகர்கள்	வேறு	மொத்தம்
1	சிங்கள மொழியும் இலக்கியமும்	37	39	2	3	11	4	9	**105**
2	விஞ்ஞானம்	17	100	10	2	13	8	9	**159**
3	கணிதம்	24	26	9	0	14	9	7	**89**
4	சமுகவியல் பாடங்கள்	0	18	0	1	5	8	1	**33**
5	சுகாதாரமும் உடற்கல்வியும்	14	25	1	0	4	4	3	**51**
6	ஆங்கிலம்	32	20	4	1	10	6	6	**79**
7	பௌத்த தர்மம்	15	23	5	1	5	2	7	**58**
8	வரலாறு	15	17	9	2	11	8	3	**65**
9	புவியியல்	16	34	3	0	9	4	7	**73**
10	கத்தோலிக்கம்	1	1	2	0	0	0	0	**4**
11	கிறிஸ்தவம்	2	0	1	0	3	0	0	**6**
12	இஸ்லாம்	2	4	2	0	2	1	1	**12**
13	சைவ நெறி	3	6	2	0	1	3	0	**15**
14	வாழ்க்கைத் தேர்ச்சி	20	6	1	0	5	5	7	**44**
15	இரண்டாம் மொழித் தமிழ்	2	1	0	0	0	2	0	**5**
16	மனைப் பொருளியல்	5	0	2	0	0	0	1	**8**
17	தகவல் தொழில் நுட்பம்	9	42	10	0	42	18	10	**131**
18	நுண் கலைப் பாடங்கள்	20	18	4	1	11	2	2	**58**
19	தமிழ் மொழி	6	6	4	3	13	3	4	**39**
20	ஆரம்பப் பிரிவு பாடங்கள்	4	0	5	2	2	10	3	**26**
21	விவசாயம்	3	33	1	0	2	0	0	**39**
22	மொழி (ஹிந்தி / ப்ரான்ஸ்)	1	8	2	0	0	0	0	**11**
23	வர்த்தகமும் கணக்கியலும்	2	73	3	0	5	2	1	**86**
24	பிரயோக தொ.நுட்பத் திறன்	4	19	0	0	0	1	1	**25**
25	வேறு மேலதிக வாசிப்புக்கள்	37	18	6	6	5	11	12	**95**
									1316

- முன்னுரையில் குறிப்பிட்டது போன்று 1-5 வரையான வகுப்புக்களுக்குள் புதிய பிரிவெனா நூல்களின் உருவாக்கமும் 2011 ஆம் ஆண்டு இடம் பெற்றது.

02. பாடநூலாக்கத்துக்கு மேலதிகமாக கற்றல் கற்பித்தல் செயற்பாட்டின் போது தேவைப்படுகின்ற ஏனைய கற்றல் உபகரணங்களை ஆக்குதலும் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் கருமங்களுள் உள்ளடங்குகின்றது. இதற்கினங்க 2011 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்பாடுகள் தொடர்பான விபரங்கள் கீழ்வருமாறு.

- பாடத்திட்டம் மற்றும் புலமைப்பரிசில் வினாப்பத்திரம் மூலம் எதிர்பார்க்கப்படும் தேர்ச்சிகளை உள்ளடக்கி உருவாக்கப்பட்ட 2011 ஆம் ஆண்டு நடந்த புலமை பரிசில் பரீட்சை வினாவிடை நூலை அச்சிடல்.
- க.பொ.த சா/த பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்குப் பயனளிக்கக் கூடிய விதத்தில் சகல பிரதான பாடங்களுக்குமான கடந்தகாலப் பரீட்சை வினாத்தாள்கள் அடங்கிய நூலொன்றை மூன்று மொழி மூலமாகவும் வெளியிடல்.
- க.பொ.த உ/த கலை, வர்த்தக, விஞ்ஞான பாடங்களுக்குரிய வினாத்தாள் நூல்கள் அச்சிடல்.
- இதற்கு மேலதிகமாக கீழ்வரக்கூடிய உயர்தரத்துக்கான மேலதிக நூல்களும் ஆக்கப்பட்டன.

புரதான கதய சங்கிரஹய
கிரா சங்தேசய
சிறுகதை தொகுதி
உயர்தர பௌதிக புவியியல்
நூதன பதய சங்கிரஹய
பொருளாதார விருத்தியும் அபிவிருத்தியும்
உயர்தர கணக்கியல்

- புதிய கணக்கியல் பிரவேசம்
- கம்பனிக் கணக்கியல்
- அநுமத விஷ்லேசனய

மேலுள்ள நூல்களைக் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் விற்பனை மேம்பாட்டு நிலையங்களிலும் எமது திணைக்களத்தில் பதிவு செய்துள்ள சகல நூல்விற்பனை நிலையங்களிலும் சலுகை விலையில் பெற்றுக் கொள்ள முடியும்.

03. கல்வித்துறை விருத்திப் பிரவேசம் மற்றும் வேலைத்தட்டத்தின் கீழ் உலக வங்கி மூலம் கிடைக்கும் உதவியிள் மூலம் பிட்டிப்பனை நூல் களஞ்சிய சாலை நிர்மாணப் பணிகள் 2011 ஆம் ஆண்டும் தொடர்ந்து மேற் கொள்ளப்பட்டது. கலஞ்சிய சாலைத் தொகுதியின் III ஆம் கட்ட நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டமை இவ்வருடத்தின் ஒரு விசேட நிகழ்வாகும்.

04. மனிதவள விருத்திச் செயற்திட்டத்தின் கீழ் இந்திய புதுடில்லி நகரிலுள்ள Institute of book Publishing நிறுவனத்தில் இடம்பெற்ற "நூல்கள் அச்சிடுதலும் பதிப்பித்தலும்" தொடர்பான பயிற்சிப் பாடநெறி (10 நாட்கள் / 6 நாட்கள்) இரணடில் அதிகாரிகள் 15 பேர் பங்குபற்றினர்.

05. பௌதிக ரீதியில் உயர் தரத்திலான நூல்களை ஆக்குதல் என்ற நோக்கில் - பாடநூல் அச்சுக்ககப் பயன்படுத்தப்படும் கடதாசியின் தரத்தை பரிசீலிப்பதற்காக ஆய்வு கூடமொன்று நடாத்திச் சொல்லப்படுவதுடன் 2011 ஆம் ஆண்டின் அனைத்து நூல்களுக்குமாகப் பயன்படுத்தப்படும் கடதாசிகளில் கீழ்வரும் தரப்பரிசீலனைகளை செய்வதற்குச் நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டது.

GSM 80 + 2.5 (Tolerance)

Printing paper - Quality Wood Free Surface Sized
(දැව අඩු බව)

Brightness (ISO) - 82% minimum
(කඩදාසියේ දීප්තිය)

Opacity - 90% minimum
(පාරාන්ධ බව)

Tensile Index - MD - 35 min kNm/kg
- CD - 20 min kNm/kg
(මුද්‍රණ කඩදාසියේ ආතතිය)

சான்றிதழ் வழங்கல்

பாடநூல்களின் மீழ் பாவனை தொடர்பில் கல்வி அமைச்சின் செயலாளரின் இல – 01.33 இலக்க 2008.23 சுற்று நிறுபத்தின் V பந்திமூலம் விதந்துரைக்கப்பட்டிருப்பதற்கிணங்க 2011 ஆம் ஆண்டு எல்லா வகுப்புக்களிலும் மிகச் சிறப்பாகப் பாடநூல்களைப் பேணிப் பயன்படுத்தியவர்கள் என உறுதிப்படுத்தப்பட்ட மூன்று மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் செயற்பாடொன்று நடை முறைப்படுத்தப்பட்டது.

நாடு பூராகவும் பாநூல் விநியோகம் இடம்பெற்ற தினமான 2011.டிசம்பர்.06 ஆம் திகதி சான்றிதல் வழங்கும் தினமாகவும் தெரிவு செய்யப்பட்டது.

இச் செயற்பாட்டின் மூலம் 2011 ஆம் ஆண்டில் பாடநூல் விரயம் கூடியளவு மட்டுப்படுத்தப்பட்டதுடன் மீள்பாவனையை தரம் - 6, 7, 8, 9 களில் 30% ஆல் அதிகரித்துக் கொள்ளவும் முடிந்துள்ளது.

2011 ஆம் ஆண்டில் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட சான்றிதழில் சிங்கள மற்றும் தமிழ் மொழி மூலப் பிரதிகள் இணைப்பு 01 இணைப்பு 02 என முன்வைக்கப்பட்டுள்ளது.

தகவல் தொழிநுட்பப் பிரிவு

திணைக்களத்தின் சகலவித தகவல்களையும், விபரங்களையும் நடாத்திச் செல்வதும், இற்றைப்படுத்துவது தொபடர்பான பொறுப்புக்களும் பாடநூல்கள் - மேலதிகநூல்கள் வேறு நூல்களைக் கணினிமயப்படத்தல் அவற்றின் மென்பிரதியைப் பெற்று அச்சுக்காகப் பொறுத்தமான விதத்தில் வடிவமைத்தலும் இதன் பிரதான செயற்பாடாகும், தகவல் தொழில்நுட்பப் பாடப்பொறுப்பு உதவி ஆணையாளர் மற்றும் முறைமைப் பாகுப்பாய்வாளர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் இவ்வனைத்து கருமங்களும் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. தகவல் தொழில்நுட்ப பிரிவில் இடம்பாறும் செயற்பாடுகளுக்கு உதவும் பொருட்டு சமயா சமய அடிப்படையில் சேவையாற்றும் கனிஷ்ட ஊழியர்கள் 08 பேர் இப்பிரிவில் இணைக்கப்பட்டுள்ளனர்.

2011 ஆம் ஆண்டு கீழ்வரும் பணிகள் இப்பிரிவு மூலம் இடம்பொற்றன.

1. 2012 ஆம் வருடத்துக்கான கோரல் படிவத்தை வடிவமைத்து அச்சுக்காக ஒப்படைத்தல்.
2. 2012 ஆம் வருடத்துக்கு அச்சிடுவதந்கு அவசியமான நூல்களின் தொகைபற்றிய விபரங்களை உற்பத்திப் பிரிவிற்கு வழங்குதல்.
3. அபிவிருத்திப் பிரிவில் உருவாக்கப்பட்ட பாடநூல்களை கணினிமயப்படுத்தலும் மென்பிரதியைத் தயாரித்தலும்.
4. களஞ்சியசாலைகளில் பாடநூல் விநியோகம் தொடர்பான விபரங்களைக் கணினிப்படுத்துவதற்கு அவசியமான கணினிவடிவமைப்பை உருவமைத்து களஞ்சியங்களின் தகவல்களை நடாத்திச்செல்லல்.
5. விநியோகித்து முடிவடைந்த பாடநூல்களின் தொகையையும் பெறுமதியையும் கணித்து நிதிப்பிரிவிற்கு வழங்கல்.
6. திணைக்களத்தின் வெப்தளத்தை இற்றைப்படுத்தி நடாத்திச்செல்வதும் வெப்தளத்திற்குப் பாடநூல்களை உள்வாங்குவதும்.
7. திணைக்களம் மூலம் வெளியிடப்படுகின்ற கடந்தகால பரீட்சை வினாத்தாள் நூல்களின் வெளிப்பக்க அட்டையை வடிவமைத்தல்.
8. பாடநூல்களைச் சிறப்பாகப் பேணிய மாணவர்களுக்கு விநியோகிக்கப்பட்ட சான்றிதழை வடிவமைத்தல்.
9. மேலதிக வாசிப்பு நூல்களைக் கணினிமயப்படுத்தல்.
10. க. வெ. தி.க்குத் தேவையான அழைப்பிதழ்கள், சுவரொட்டிகள், போஸ்டர்கள் நிர்மாணித்தல்.
11. திணைக்களத்தின் சகல கணினிகளையும் பராமரித்தல்.

உற்பத்திப்பிரிவு

அறிமுகம்

கல்விவெளியீட்டுத் திணைக்களத்தின் உற்பத்திபிரிவில் - ஆணையாளர்(உற்பத்தி மற்றும் விநியோகம்)இன் கீழ் - உதவி ஆணையாளர் இருவருடன் அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை உத்தியோகத்தர் இருவரும் காரியாலய உதவியாளர் மற்றும் சமயாசமய ஊழியர்கள் இருவரும் சேவையாற்றுகின்றனர் - கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் அனுசரனையுடன் பாடசாலை மாணவர்களுக்காக உருவாக்கப்படுகின்ற சகல பாடநூல்களையும் அரசாங்க அச்சகம், அரசாங்க அச்சகத் கூட்டுத்தாபனம், மற்றும் தனியார் அச்சகங்கள் மூலமாக அச்சடிப்பதே இப்பிரிவின் பிரதான பணியாகும். இதற்கு மேலதிகமாக தேசிய கல்வி நிறுவகம் மூலம் வடிவமைக்கப்பட்ட ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளையும், பாடத்திட்டங்களையும் அச்சடிப்பதும் இடம் பெறுகின்றது.

2011 ஆம் வருடத்துள் இப்பிரிவின் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்ட கருமங்கள் தொடர்பான விபரங்கள் கீழ்வருமாறு.

1. பாடசாலைப் பாடநூல்களுக்கான ஒப்பந்தங்களை (Tender) வழங்குவதற்குமுன் விவரக்குறிப்புகளை அமைப்பதற்கு அவசியமான விபரங்களைத் திரட்டுதல். தகவல் தொழில்நுட்பப்பிரிவு, விநியோகப்பிரிவு மற்றும் களஞ்சியங்களிலிருந்து மொத்த இருப்பைபெறல்.

2. விவரக்குறிப்புக்குழுவொன்றின் மூலம் 2012க்கான பாடநூல் அச்சுக்காக விவரக்குறிப்புகளை திரட்டுதல்.

3. விவரக்குறிப்பு குழுவினால் உருவாக்கப்பட்ட (திரட்டப்பட்ட) அறிக்கையை கல்விவெளியீட்டு ஆணையாளர் நாயகம் மூலம் அனுமதிபெற்று நிதிப்பிரிவிற்குக் கையளித்தல்.

4. ஒவ்வொரு பாடப்பொறுப்பு அதிகாரிகளுக்கும் அச்சகப்பிரதி (Press Copy) மற்றும் மாற்றப்பட்ட பிரதி (Transfered Copy) களை வழங்கி அவற்றில் திருத்தங்களை மேற்கொண்டு உரிய இறுவட்டை தகவல் தொழில்நுட்ப பிரிவு மூலம் பரிசீலித்தல்.

5. உரிய Tender களைப் பெற்றுக்கொண்ட நிறுவனங்களுக்கு அச்சகப்பிரதி (Press Copy) களையும், சரியான இறுவட்டையும் வழங்குதல்.

6. சரவை பார்ப்பது முதல் தரப் பரிசீலனை வரை நூல் தொடர்பான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல்.

7. உரிய காலத்துள் அச்சகத்தாரை அறிவுறுத்தி சரியான நூல் தொகையைக் களஞ்கியசாலைக்குப் பெற்றுக் கொடுத்தல்.

8. அச்சகங்கள் மூலம் ஏற்படும் அச்சுப்பிழைகளைத் திருத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

9. அவசியமேற்படுமிடத்து அச்சகங்களை பரிசீலித்தலும் அவற்றின் அச்சிடல் தொடர்பான திட்டங்களைப் பெற்று அவற்றைப் பரிசீலனைக்குட்படுத்தி உற்பத்திப் போக்கு தொடர்பான நாளாந்த அறிக்கைகளை ஆக்குதல்.

10. பாடசாலைப் பாடநூல்களின் பௌதிகத்தன்மையை உயர்த்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல். இதன் நிமித்தம் உள்வாங்கப்பட்டுள்ள பத்திரிகை (Paper) வெளி அட்டைகளுக்காக நான்கு வர்ண படங்கள் மற்றும் தேசப்படங்களை வடிவமைத்தல்.வெளி அட்டைகளுக்காக லெமினேட் ஆட்போர்டையும், 220 gsm அளவு கடதாசியையும் உள்வாங்குவதன் மூலம் கவர்ச்சிமிக்க நூல் தொகுதியொன்றை மாணவர்களுக்குக் கிடைக்கச் செய்தல்.

11. அனைத்து நூல்களும் விபரக்குறிப்புக்கு பெருத்தும் விதத்தில் காணப்படுகின்றதா எனப் பரீட்சிப்பதற்கு ஆய்வுகூட அறிக்கையொன்றைப் பெற்றுக்கொள்ளல்.

12. தேசிய கல்வி நிறுவகத்துடன் தொடர்புக்கொண்டு ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளை அச்சிடல்.

13. மேலதிக வாசிப்பு நூல்களை மீள் அச்சிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்.

14. பரீட்சைத் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு க.பொ.த (சா/த), க.பொ.த(உ/த), தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைகளுக்கான வினாவிடை நூல்களை அச்சிடல்.

வெளியீட்டுப்பிரிவு

கல்வி வெளியீட்டுத் திணைக்கள வெளியீட்டுப்பிரிவில் உற்பத்தி மற்றும் விநியோகத்திற்குப் பொறுப்பான ஆணையாளரின் கீழ் அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையைச் சேர்ந்த ஆறு உத்தியோகத்தர்களும் சமயாசமய ஊழியர் ஒருவரும் சேவையாற்றகின்றனர்.

2011 ஆம் ஆண்டில் விநியோகப்பிரிவின் மூலம் நிறைவு செய்யப்பட்ட செயற்பாடுகளின் சுருக்கமான விபரம் கீழ்வருமாறு.

1. பாடநூல்கள் மற்றும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளை அச்சிடுவதற்கான கோரல்களை அச்சகத்திற்ககு வழங்கல்.

2. ஒப்பந்தங்களை ஒழுங்கமைத்து அச்சகத்தாருடன் உடன்பாட்டுக்கு வருதல்.

3. மேலதிக நூல்களுக்கான ஒப்பந்த மதிப்பீடுகளைப் பெறுவது முதல் அச்சிடுதல் வரையிலான அனைத்து எழுத்து மூல நடவடிக்கைகளையும் நடைமுறைப்படுத்தல்.

4. கேள்வி கோரல்களுக்கு மேலதிகமாக பாடநூல்களுக்கான மதிப்பீடுகளை எடுப்பிப்பது முதல் கோரல்களை ஒப்படைக்கும் வரையிலான சகல நடவடிக்கைகளும்.

5. நூல்களுக்கான விலைகளை நிர்ணயம் செய்தல்.

6. அச்சகத்தாருக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கான வவுச்சர்களை ஒழுங்கமைத்தல்.

விநியோகப் பிரிவு

அறிமுகம்

பாடநூல் விநியோகப் பிரிவானது உற்பத்தி மற்றும் விநியோகத்திற்கான ஆணையாளரின் நேரடி நிர்வாகத்தின் கீழ் இயங்குகின்றது. உதவி ஆணையாளரொருவர் மற்றும் அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை அதிகாரிகள் இருவருடன் சமயாசமய அடிப்படையில் இயங்குகின்ற கனிஷ்ட சேவையாளர் 22 பேரும் இப்பிரிவில் சேவையாற்றுகின்றனர். அரச மற்றும் அரச உதவி பெறும் பாடசாலைகளில் தரம் 1 முதல் 11 வரை கல்வி கற்கும் 4 மில்லியனுக்கு அதிகமான மாணவர் தொகையினருக்கு ஒவ்வொரு பாடசாலைக்கும் பாடசாலை வருடம் ஆரம்பிப்பதற்கு முன்பதாகப் பாடநூல்களை பெற்றுக்கொடுப்பதே இப்பிரிவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்பாகும். இச்செயற்பாட்டின்போது பாடசாலைகள் மற்றும் விநியோக மத்திய நிலையங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்படுகின்ற தொகைகளின் அடிப்படையில் பாடசாலைகள் மற்றும் மத்திய நிலையங்களுக்கு அவசியமான பாடநூல்களின் தொகை தீர்மாணிக்கப்படுகின்றது. அடுத்த ஆண்டுக்கு அவசியப்படுகின்ற முழுப்பாடநூல்களின் அளவு தீர்மாணிக்கப்படுவது இத்தொகை அட்டவனை அடிப்படையிலேயே ஆகும்.(கோரல் படிவம் இணைப்பு 3,4,5இன் கீழ் காட்டப்பட்டுள்ளன.

2011 ஆம் வருடத்துள் இப் பிரிவின் மூலம் நிறைவு செய்யப்பட்ட செயற்பாடுகள் தொடர்பான விபரங்கள் வருமாறு.

பாடநூல் விநியோகம்

2011 பாடநூல் விநியோக செயற்திட்டத்திற்கிணங்க நாடு பூராகவுமுள்ள தேசிய பாடசாலைகளுக்கும், 2000க்கு மேற்பட்ட மாணவர்தொகையைக் கொண்ட மாகாணப் பாடசாலைகளுக்கும், அரச அனுசரனையில் இலவசமாகப் பாடநூல்களைப் பெறும் 2000க்குச் கூடிய மாணவர்களைக் கொண்ட தனியார் பாடசாலைகளுக்கும் நேரடியாகவே பாடநூல்கள் விநியோகப்படுகின்றன. அரச பாடசாலைகள் 9700இலும், அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகள் 75இலும் பிரிவெனாக்கள் 772இலும் ஆசிரியர் கலாசாலைகள், கல்வியியற் கல்லூரிகளிலுமுள்ள 41 இலட்சம் மாணவர் சமுகத்துக்கு 364 வகையான பாடநூல்கள் விநியோகிக்கப்படுகின்றன. ஏறக்குறைய 30 மில்லியன் நூல்களுக்கு 3000 மில்லியன் ரூபாக்கு அன்னளவான தொகை ஒதுக்கப்படுகின்றது.

ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி விநியோகம் -

நாட்டின் பாடசாலைகளின் தேவைக்கேற்ப ஆ. அ. வழிகாட்டிகள் விநியோகிக்கப் படுகின்றன.

நூல் விநியோக உபகுழு

பாடநூல் விநியோகத்தின் போது விஷேடமாகக் கவனஞ் செலுத்தப்பட வேண்டிய பிரிவுக்காக பல உப குழுக்களைத் தெரிவு செய்யப்படவேண்டி ஏற்பட்டது.

(அ) பாட நூல்களின் தரத்தை மதிப்பீட்டுக் குழு உத்தியோகத்தர் மூலம் உரிய விடய அடிப்படையிலும் மொழிமூல அடிப்படையிலும் தெரிவு செய்யப்பட்டு களஞ்சியங்களுக்கு வரும் நூல்களைத் திடீர் சோதனைக்குட்படுத்தும் செயலொழுங்கொன்று ஏற்பாடு செய்யப்பட்டது.

(ஆ) செயற்திட்ட உருவாக்கத்துக்கும் தரமுகாமைத்துவத்துக்குமான பிரிவொன்று நூல் விநியோகப் பிரிவுடன் ஒன்றினைக்கப்பட்டது. நூல் விநியோக செயற்பாட்டைத் திட்டமிடுவதுடன், பாடசாலைகளுக்கும் - விநியோக மத்திய நிலையங்களுக்கும், கோட்டக் கல்விக் காரியாலயங்களுக்கும் அனுப்பும் நூல்களுக்கான விநியோகக் கட்டளைகளைத் தயார் செய்தலும் இதன் பொறுப்பாகும். களஞ்சிய சாலைகளுக்கு வரும் நூல் வகைகள், தொகைகள் என்பன தொடர்பான நாளாந்த விபரங்களைப் பெற்று விநியோகக் கட்டளைகளை ஒழுங்கு படுத்துவதன் மூலம் ஒரே மாவட்டத்துக்கு நூல் போக்குவரத்துச் செய்யும் முறைகளின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கு இதன் மூலம் (முடியுமாகியது) இடம் கிடைத்தது.

பாடநூல் கோரல் படிவங்களை 03 வர்ணங்களில் அச்சிட்டு, கோட்டக்கல்விப் பணிப்பாளர்கள், மற்றும் அதிபர்களுக்கு அனுப்பப்படுகின்றன. விபரங்களை எடுப்பிக்கும் போதும், நூல்களை விநியோகிக்கும் போதும் ஏற்படும் தவறுகளைக் குறைத்து அக்கருமத்தைச் செயற்திறன் மிக்கதாகவும், நேர்த்தியாகவும் மேற்கொள்வதற்கு இதனால் முடிந்துள்ளது. ஆரம்ப பிரிவெனாக்களுக்குரிய பாடநூல்களும் கோட்டக் கல்விக் காரியாலயம் மூலம் விநியோகிக்கப்படுவதுடன் பிரிவெனாதிபதிகளின் பிரிவெனாக்களுக்கு அவசியமான பாடநூல்கள் தொடர்பான தொகைப்பட்டியலும் வருடாந்த கோரல் பட்டியலில் உள்வாங்கப்பட்டு எடுப்பிப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பாடநூல்களின் பாவனைக்காலத்தை 03 வருடங்கள் வரை அதிகரிக்கும் நோக்குடன் நூல்களின் பௌதிக தரம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

பாடநூல் மீள்பாவனைக்கான நடவடிக்கைகள்

பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்படும் பாடநூல்களை வருட இறுதியில் மீள் பாவனையின் பொருட்டு திருப்பி ஒப்படைக்க வேண்டும். (ஆரம்பப் பிரிவுக்கு வழங்கப்படும் பாடநூல்கள் செயல்நூல்கள் க.பொ.த.(சா/த) ப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் நூல்கள் மீள எடுக்கப்படுவதில்லை. பாடநூல்களின் பாவனைக் காலத்தை 03வருடங்கள் வரை அதிகரிக்கும் நோக்குடன் நூல்களின் பௌதிக தரம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

2012 ஆம் ஆண்டுக்கான பாடநூல் விநியோகத்துக்கான உத்தியோக பூர்வ விழா இம்முறை கண்டி உயர்தர பெண்கள் கல்லூரியிலேயே ஏற்பாடுசெய்யப்பட்டது. 2011 டிசம்பர் 06 ஆம் தியதியன்று அவ்விழாவானது கௌரவ பிரதமரின் தலைமையிலும் கௌரவ கல்வி அமைச்சரின் பங்குபற்றுதலுடனும் இடம்பெற்றது. அதன் போது விஷேட உதவி தேவைப்படும் மாணவர்களுக்கும் பாடநூல்கள் மற்றும் சான்றிதழ் வழங்கப்பட்டமை ஒரு விஷேட நிகழ்வாகும். நாட்டின் சகல பாடசாலைகளிலும் பாடநூல் விநியோக தினமானது இவ்விழாவுடன் இணைந்நதாக மேற்கொள்ளப்படுகின்றது.

கல்வி வெளியீட்டுத் திணைக்களம் மூலம் நேரடியாக நூல்கள் விநியோகிக்கும் நிலையங்கள் மாகாண அடிப்படையில் பரந்து காணப்படும் முறை - 2011

தெடர் இலக்கம்	மாகாணம்	கோட்டக் கல்விக் காரியாலயங்கள்	புதிய விநியோக நிலையங்கள்	தேசிய பாடசாலைகள்	2000க்குக் கூடிய மாணவர்கள் கொண்ட பாடசாலைகள்	2000க்குக் கூடிய மாணவர்களுள்ள அரச உதவி பெறும் தனியார் பாடசாலைகள்	கொழும்பு வலயம் நுகேகொட கோட்டங்களில் 2000க்குக் குறைந்த மாணவர்களுள்ள பாடசாலைகள்	மொத்தம்
1	மேல்	31	18	69	56	21	135	330
2	மத்திய	51	4	54	16	02	00	127
3	தென்	34	14	63	08	01	00	120
4	வட	33	07	11	03	01	00	55
5	கிழக்கு	46	00	30	03	00	00	79
6	வடமேல்	30	16	35	17	00	00	98
7	வடமத்திய	22	18	10	08	00	00	58
8	ஊவா	22	18	36	07	00	00	83
9	ஸப்ரகமுவ	01	82	28	10	00	00	121
	மொத்தம்	**270**	**177**	**336**	**128**	**25**	**135**	**1071**

நிதிப்பிரிவு

கல்வி வெளியீட்டு திணைக்களமானது கல்வி அமைச்சின் கீழ் அமைக்கப்பட்டுள்ள வருடாந்தம் 2400 மில்லியன் ரூபாய் அளவு ஒதுக்கின் கீழ் இயங்கும் ஒரு தனி நிதிப் பிரிவாகும்.

நூல் விநியோகம் தொடர்பான ஒப்பந்தம் கைச்சாத்திடல் உட்பட அனைத்து நடவடிக்கைகளுக்கும் அவசியமான அதிகாரப்பலம் மற்றும் நிதி அதிகாரங்களை வழங்கி நூல் வெளியீட்டை காரியசித்தியுடன் நடைமுறைப்படுத்துவதற்கு முடியுமான விதத்தில் கல்வி வெளியீட்டு திணைக்களமானது A தரத்திலான ஒருதிணைக்கள நிலைக்கு உயர்தரமாக்கப்பட்டுள்ளது.

நிதிப்பிரிவுக்குப் பொறுப்பாக இலங்கை கணக்காளர் சேவை முதலாம் தரக் கணக்காளர் ஒருவர் செயற்படுவதுடன் 1ஆம் அல்லது 11 ஆம்தரக் கணக்காளர் ஒருவருக்கான வெற்றிடமொன்றும் காணப்படுகின்றது.

கல்விப் புலத்தில் தரவிருத்தியொன்றை ஏற்படுத்தும் விடயத்தில் கல்வி வெளியீட்டுத் திணைக்களம் மூலம் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை பாடநூல்களை இலவசமாக வழங்கல் எனும் அரச கொள்கையை நடைமுறைப்படுத்தி பாடசாலை மாணவர்களுக்கான பாடநூல்களை ஆக்குவதும் அச்சிட்டு நாடுபூராகவும் விநியோகிப்பதுமாகும். இதற்கு மேலதிகமாக உயர்தரம் மற்றும் வேறு பரீட்சைகளை நோக்காகக் கொண்டு கல்வி வெளியீடுகள் மற்றும் கடந்த கால வினாவிடை நூல்களை ஆக்கி சலுகை விலையில் விற்பனை செய்கின்றது.

திணைக்களத்தின் பிரதான வருமான வழியாக நூல் விற்பனை மேம்பாட்டு நிலையங்களை நடாத்திச் செல்வது காணப்படகின்றது.

கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் கீழ் ஆறு விற்பனை மேம்பாட்டு நிலையங்கள் பின்வரும் இடங்களில் நிறுவப்பட்டுள்ளன.

கல்வி அமைச்சு வளாகம்.
ஓல்கட் மாவத்தை
யாழ்ப்பாணம்
தேசிய கல்வி நிறுவகம் - மகரகமை
ஆசிரியர் பயிற்சி நிலையம் - மீப்பே
கோட்டை புகையிரத நிலையம்

பாடநூல்கள், ஏனைய வாசிப்பு நூல்கள், மொழி பெயர்ப்புப் புத்தகங்கள், கலைச்சொல் அகராதிகள், சொல் அகராதிகள், கல்விப்புல இறுவெட்டுகள், என்பன இந்நிலையங்களில் விற்பனை செய்யப்படுவதுடன், தேசிய பாடத்திட்டத்தின் கீழ் ஆங்கில மொழி மூலமாகக் கல்வி போதிக்கின்ற தனியார் பாடசாலைகளுக்கான நூல் விற்பனையும் 2008 முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 2011ஆம் ஆண்டில் இரண்டு வாகனங்கள் மூலம் நாடு பூராகவும் நடமாடும் நூல் விற்பனை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

2011 ஆம் வருடத்தில் நூல் விற்பனை மூலம் பெறப்பட்ட மொத்த வருமானம் ரூபா 61,231,133.56 ஆகும்.

இசுருபாய நூல் விற்பனை நிலையம்	ரூ 6,142,821.80
ஓல்கொட் மாவத்த நூல் விற்பனை நிலையம்	ரூ 44,423,617.95
யாழ்பாண நூல் விற்பனை நிலையம்	ரூ 1,164,736.97

தே.க.நி. மகரகம நூல் விற்பனை நிலையம்	ரூ 6,344,272.84
ஆசிரியர் பயிற்சி நிலையம் மீப்பே நூல் விற்பனை நிலையம்	ரூ 1,660,836.00
கோட்டை புகையிரத நிலைய நூல் விற்பனை நிலையம்	ரூ 1,494,858.00

2011.02.04 ஆம் திகதி முதல் 2011.02.10 ஆம் திகதி வரை நடை பெற்ற தேசத்திற்கு மகுடம் தேசிய மாபெரும் கண்காட்சியிலும் 2011.09.17 முதல் 2011.09.25 வரை கொழும்பு பண்டாரநாயக மகாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற சர்வதேச புத்தகக் கண்காட்சிலும் கலந்து கொண்டதன் மூலம் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் சமூகமளித்திருந்த பாடசாலை மாணவர்களுட்பட பெரும் தொகையினருக்கு திணைக்களத்தின் வெளியீடுகளைப் பெற்று கொள்வதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது.

2011 நிதிச் செயற்பாட்டு அறிக்கை

வரவு செலவு விபரம்	2011வருடாந்த ஒதுக்கு	2011.12.31ஆம் திகதியன்று செலவு
சம்மதிக்கப்பட்ட செலவுகள்		
ஆளுக்குரிய வேதனங்கள்	24,097,860.00	18,722,828.00
ஏனைய மீண்டுவரும் செலவுகள்	2,288,140.00	2,228,516.00
முழு மீண்டுவரும் செலவுகள்	**26,386,000.00**	**20,951,344.00**
மூலதனச் செலவுகள்		
புனரமைப்பு மேம்பாடுகள்	155,000.00	152,630.00
மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு		
தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள்	700,000.00	536,616.00
பொறித்தொகுதி இயந்திரம் மற்றும் உபகரணங்கள்	1,000,000.00	953,782.00
கட்டிடங்கள்	37,500,000.00	747,155.00
திறன் விருத்தி	2,500,000.00	2,392,550.00
மொத்தம்	**41,855,000.00**	**4,782,733.00**
ஏனைய மூலதனச் செலவுகள்		
பாடசாலைப் பாடநூல் தரத்தை மேம்படுத்தல்	50,500,000.00	8,537,169.00
அனுமதிக்கப்பட்ட முற்பணக் கணக்கு		
மிகக் கூடிய செலவு எல்லை - (பாடநூல் அச்சிடல் விநியோகம்)	2,900,000,000.00	2,329,474,138.87
மிக்க குறைந்த இருப்பு எல்லை -	2,900,000,000.00	2,357,376,210.95
மிகக் கூடிய செலவு எல்லை மீதி -	4,000,000,000.00	1,025,087,310.19
அரச உத்தியோகத்தரின் முற்பணக் கணக்கு		
மிகக் கூடிய செலவு எல்லை -	6,280,000.00	8,202,530.50
மிக்க குறைந்த இருப்பு எல்லை -	3,600,000.00	7,042,591.50
மிகக் கூடிய செலவு எல்லை மீதி -	28,000,000.00	21,339,197.36

2011 முன்னேற்றத்தைக் காட்டும் பட்டியல்

2011 ல் உற்பத்தி செய்யப்பட்ட பாடநூல்கள் மொழிமூல அடிப்படையில் விநியோகிக்கப்பட்ட முறையைக் கீழ் வரும் அட்டவணையில் காணலாம்.

கல்வி வெளியீட்டுத் திணைக்களம் மூலம் 2012ஆண்டுக்காக வெளியிடப்பட்டபாடசாலைப் பாட நூல்கள் (மொழி மூல அடிப்படையில்)		
தொடர் இலக்கம்	**மொழி மூலம்**	**நூல் வகைகளின் எண்ணிக்கை**
1	சிங்கள மொழி நூல்கள்	159
2	தமிழ் மொழி மூல நூல்கள்	158
3	ஆங்கில மொழி மூல நூல்கள்	55
4	ஆங்கில மொழி மூல நூல்கள் (எல்லா மொழி மூலத்திற்குமாக)	26
5	பிரிவெனா சிங்கள மொழி மூல நூல்கள்	31
6	பிரிவெனா ஆங்கில மொழி நூல்கள்	04
7	பிரிவெனா தமிழ்	05
	மொத்த நூல்கள் தொகை	**437**

2011 ஆம் ஆண்டில் உயர்தரத்துக்காக ஆக்கப்பட்ட புதிய மேலதிக நூல்கள்.

நூலின் பெயர்	போக்கு
புராதன கத்ய ஸங்கிரஹய	அச்சிட்டு முடிந்துள்ளது.
கிராஸங்தேசய	அச்சிடுவதற்குத் தயாராக உள்ளது
கெட்டிகதா ஸங்கிரஹய	அச்சிடுவதற்குத் தயாராக உள்ளது
உயர்தர பௌதிக புவியியல்	புதிப்பு இடம்பெறுகிறது
நூதன பதய ஸங்கிரஹய	அச்சிடுவதற்குத் தயாராக உள்ளது
பொருளாதார வளர்ச்சியும் அபிவிருத்தியும்	அச்சிட்டு முடிந்துள்ளது.
உயர்தர கணக்கியல் • புதிய கணக்கியல் பிரவேசம் • நிறுவண கணக்கியல் • அநுமத வித்லேசனம்	அச்சிட்டு முடிந்துள்ளது.

2012 ஆம் வருடத்துக்காக 2011ஆம் ஆண்டில் ஒவ்வொரு தரத்துக்குமாக கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட நூல்வகைகளும், ஒவ்வொரு மாணவர்களுக்கும் கிடைக்கும் நூல்களின் தொகையும்

தரம்	நூல்களின் தொகை (மொழி, சமயம், விருப்புக்குறிய பாட அடிப்படையில்)			ஒரு மாணவன் பெற்றுக்கொள்ளும் நூல்களின் தொகை
	தனி நூல்களாக	தொகுதியாக	மொத்தம்	
தரம் - 01	14	0	14	4
தரம் - 02	14	0	14	4
தரம் - 03	12	6	18	8
தரம் - 04	13	2	15	6
தரம் - 05	13	2	15	6
தரம் - 06	28	10	38	14
தரம் - 07	17	32	49	20
தரம் - 08	13	40	53	21
தரம் - 09	23	20	43	16
தரம் - 10	49	19	68	15
தரம் - 11	37	32	69	15
தரம் - 12	1	0	1	1
பாடசாலை நூல்களின் மொத்தம்	**234**	**163**	**397**	
பிரிவெனா - 01	7	0	7	7
பிரிவெனா - 02	6	0	6	6
பிரிவெனா - 03	9	0	9	9
பிரிவெனா - 04	9	0	9	9
பிரிவெனா - 05	9	0	9	9
பிரிவெனா நூல்களின் மொத்தம்	40	0	40	
முழு மொத்தம்	**274**	**163**	**437**	

2012 ஆம் ஆண்டுக்காக ஒவ்வொறு தரத்துக்காகவும் வெளியிடப்பட்ட நூல்களின் தொகை



2012 ஆம் பாடசாலைக்கான பாடநூல் அச்சிடல் - 2011

தொடர் இலக்கம்	அச்சகம்	நூல் வகைகளின் எண்ணிக்கை	பிரதிகளின் எண்ணிக்கை
01	அரசாங்க அச்சகம் (GP)	05	905,000
02	அரசாங்க அச்சக கூட்டுத்தாபணம் (SPC)	81	7,400,900
03	திறந்த விலைமனுக் கோரல்	308	26,041,450
அச்சிடப்பட்ட நூல்களின் மொத்தம்		394	**34,347,350**

2012 ஆம் ஆண்டுக்கான ஆசிரியர் அறிவுரை வழிகாட்டி - 2011

தொடர் இலக்கம்	நூல் வகை	நூல் வகைகளின் தொகை
01	6-11 ஆசிரியர் அறிவுரை வழிகாட்டி	06
02	12- 13 ஆசிரியர் அறிவுரை வழிகாட்டி	46
அச்சிடப்பட்ட நூல் வகைகளின் மொத்தம்		52

2012 ஆம் ஆண்டுக்காக வினாவிடை நூல்கள் மேலதிக வாசிப்பு நூல்கள் அச்சிடல் - 2011

தொடர் இலக்கம்	நூல் வகை	நூல் வகைகளின் தொகை	பிரதிகளின் தொகை
01	மேலதிக நூல்கள்	06	95,000
02	வினாவிடை நூல்கள்	21	354,000
அச்சிடப்பட்ட நூல் வகைகளின் மொத்தம்			**449,000**

2012 க்கான பாடசாலைப் பாடநூல் விநியோகம் - 2011

தொடர் இலக்கம்	மாகாணம்	கோரிய நூல்களின் தொகை	தற்போதைக்கு விநியோகித்துள்ள தொகை	விநியோகத் தொகை -கோரிய தொகையின் நூற்று விகிதத்தில்
1	மேற்கு	9,191,229	9,191,229	100.00
2	தெற்கு	4,580,698	4,580,698	100.00
3	மத்திய	4,536,826	4,536,826	100.00
4	வடமேல்	4,107,822	4,107,822	100.00
5	கிழக்கு	4,009,792	4,009,792	100.00
6	சப்ரகமுவ	3,200,374	3,200,374	100.00
7	ஊவா	2,668,575	2,668,575	100.00
8	வடக்கு	2,537,587	2,537,587	100.00
9	வடமத்திய	2,415,760	2,415,760	100.00
	மொத்தம்	**37,248,663**	**37,248,663**	**100.00**

11.5. 2012 கோரிய மற்றும் விநியோகித்த அளவுகள்



புதிய பிரவேசங்கள்

வெளி எழுத்தாளர்களின் நூல்களைக் கல்வி வெ. தி இன் நூல் விற்பனை மேம்பாட்டு நிலையங்களில் விற்பனை செய்தல்.

வெளி எழுத்தாளர்கள் மற்றும் வெளியீட்டாளர்கள் மூலம் வெளியிடப்படும் கல்வியுடன் தொடர்பான நூல்களை நிபுணத்துவக் குழுவொன்றின் பரிந்துரையின் பின் அரச நிதிக் கோட்பாட்டுக்கிணங்க கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் நூல் விற்பனை மேம்பாட்டு நிலையங்களில் விற்பனை செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் உரிய எழுத்தாளர்களுக்குத் தமது நூல்களை விற்பனை செய்து கொள்வதற்கான சந்தர்ப்பம் கிடைப்பதுடன் வாசிப்போருக்குத் தரமான நூலொன்றை விலை கொடுத்து வாங்குவதற்கான சந்தர்ப்பமும் கிடைக்கின்றது.

நடமாடும் நூல் விற்பனை ஊர்தி

க. வெ. தி மூலம் வெளியிடப்படும் மேலதிக வாசிப்பு நூல்கள், பாடங்களுக்கான நூல்கள் வினாவிடை நூல்கள் , பரிந்துரைக்கப்பட்ட நூல்கள் - ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகள் போன்றவற்றை விற்பனை செய்யும் பொருட்டு இரண்டு நடமாடும் ஊர்திகள் நாடு முழுவதிலுமுள்ள பாடசாலைகளுக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளன. இதன் மூலம் பின்தங்கிய பகுதி மாணவர்களுக்கு அவசியமான நூல்களைச் சலுகை விலையில் பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பம் கிடைக்கின்றது.

உயர் தரத்துக்கான புதிய மேலதிக நூல்கள்

உயர் தர புதிய பாடத்திட்டத்துக்கிணைந்த விடயத்துடனான பல மேலதிக நூல்களை வெளியிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சுருக்கம்

2011 ஆம் ஆண்டு எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களும் முன்னேற்றமும்

1. **2012ஆம் வருடத்துக்கான பாடசாலை மாணவர்களுக்கு தேவையான நூல்களை ஆக்குதல்**

   2012 ஆம் வருடத்துக்குப் பாடசாலை மாணவர்களுக்கு அவசியமான சகல பாடநூல்களும் உரிய கால நேரத்துள் உற்பத்தி செய்து முடிக்கப்பட்டன.

2. **தேசிய கல்வி நிறுவகம் மூலம் ஆக்கப்பட்டு அனுப்பப்படும் ஆசிரியர்அறிவுரைப்பு வழிகாட்டகளை அச்சிடல்**

   தேசிய கல்வி நிறுவகம் மூலம் ஆக்கப்பட்டு அனுப்பப்படும் ஆ.அ வழிகாட்டிகளின் அச்சிடல் நடவடிக்கை வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டது..

3. **2012ஆம் வருடத்துக்கான மீள்பதிப்பு செய்யப்படும் பாடநூல்களின் தரத்தை விருத்தி செய்தல்**

   2012 ஆம் ஆண்டு, மாணவர்களுக்கு விநியோகிக்கப்படும் பாடநூல்கள் மீள் அச்சிடலுக்கு முன்னர் நிபுணத்துவக் குழுவின் பங்குபற்றலுடன் விடயத்தை இற்றைப்படுத்தல் மற்றும் தரத்தை மேம்படுத்தல் செயற்பாடுகள் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டன

4. **உயர் தரத்துக்கும் வேறு பரீட்சைக்குமாக மேலதிக நூல்கள், வினாவிடை நூல்களை உற்பத்தி செய்தல்.**

   நிபுணத்துவக் குழுக்களின் பங்குபற்றலுடன் மேலதிக நூல்கள் உருவாக்கப்பட்டுள்ளதுடன் அவை கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் விற்பனை மேம்பாட்டு நிலையங்களிலும் பதிவு செய்யப்பட்ட நூல்விற்பனைநிலையங்களிலும் சலுகை விலையில் விற்பனை செய்வதற்கு வழங்கப்பட்டுள்ளன. 2011ஆம் வருட புலமைப்பரிசில் பரீட்சை, சாதாரணதர பரீட்சை மற்றும் உயர்தரப் பரீட்சைகளின் வினாதாள்களும், விடைகளும் - வினாவிடைநூல்களாக இரு மொழி மூலங்களிலுமாக வடிவமைக்கப்பட்டு சலுகைவிலையில் விற்பனைக்காக வழங்கப்பட்டுள்ளன.

5. **2012 வருடத்துக்கு மாணவர்களுக்கு அவசியமான பாடநூல்களைப் பாடசாலைகளுக்கும் நூல் விநியோக நிலையங்களுக்கும் விநியோகித்தல்.**

   பாடசாலைகளினாலும், விநியோக நிலையங்களினாலும் கோரப்பட்ட சகல பாட நூல்களும் 2011 ஆம் ஆண்டு முடிவடைவதற்கு முன்னர் உரிய விநியோக நிலையங்கள் மற்றும் பாடசாலைகளுக்கு விநியோகித்து முடிக்கப்பட்டுள்ளன.

6. **ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி விநியோகம்.**

ஆச்சிடப்பட்ட சகல ஆ. அ. வழிகாட்டிகளையும் ஆசிரியர்களுக்குக் கிடைக்கச் செய்வதற்காகப் பாடசாலைகளுக்கும் - நூல் விநியோக நிலையங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

7. **மீள் பாவனையை ஊக்குவித்தல்**

பாடநூல் மீள்பாவனையை ஊக்குவிப்பதற்காகச் சான்றிதழ்கள் வழங்குவதும் மாணவர்களுக்கு அறிவூட்டுவதும இடம் பெறுவதுடன் இதன் மூலம் பாடநூல் விண்விரயத்தைக் குறைக்க முடிந்துள்ளது.

8. **மனிதவள விருத்தி நடவடிக்கை**

இரண்டு சந்தர்ப்பங்களில் வெளிநாட்டுப் பயிற்சி நடவடிக்கைகள் மூலம் 21 பேரைப் பயிற்றுவிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன், இதன் மூலம் திணைக்களத்தின் செயற்பாடுகளை உயர்த்து வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

9. **பிட்டிபனை – களஞ்சியசாலைத் தொகுதியின் இரண்டாம் கட்டத்தை நிறைவு செய்தல்**
(Phase - C (A மற்றும் D Black))

2010. 10. 20 இக்களஞ்சியசாலைத் தொகுதியின் நிர்மானம் ஆரம்பிக்கப்பட்டதுடன் 2011. 06. 10 அன்று அது நிறைவு செய்யத்தீர்மாணிக்கப்பட்டது. இருந்த போதும் இந்நிர்மானத்தை அரம்பித்து நடாத்திக் கொண்டு செல்லும் போது ஒப்பந்தக்காரர்கள் மூலம் மண்ணை வெளியே கொண்டு செல்லும் போது இடம்பெற்ற பிரச்சினை காரணமாக அது நீதிமன்ற நடவடிக்கைக்கு உள்வாங்கப்பட்டதுடன் - நீதிமன்ற நடவடிக்கை முடியும் வரை 06 மாதங்களளவில் நிர்மானம் இடைநிறுத்தப்பட்டது. நீதிமன்ற நடவடிக்கை நிறைவடைந்த பின்னர் மீண்டும் வேலைகள் 2011.05.16 அன்றே ஆரம்பமாகின. இதன் காரணமாக 2011.06.10 ஆகும் போது இந்நிர்மானப்பணிகளை நிறைவு செய்ய முடியாது போயின. 2011.05.16 முதல் இது செயற்படுவதுடன் 2011 ஆம் வருடம் முடியும் போது கீழ்மாடியின் மேற்தளம் (Slab) முடிக்கப்பட்டிருந்தது.

10 ශ්‍රේණිය

පාසල් පෙළපොත් හොඳින් පරිහරණය කිරීමේ වැඩසටහන

අධ්‍යාපන ප්‍රකාශන දෙපාර්තමේන්තුව

අධ්‍යාපන අමාත්‍යාංශය

2011



ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජය මගින්
නොමිලේ ලබා දෙන පෙළපොත් ඉතා හොඳින් පරිහරණය කිරීමෙන්
ජාතික ධනය සුරැකීමේ කරන ලද දායකත්වය වෙනුවෙන්

..... විදුහලේ ..... ශ්‍රේණියේ

..... ශිෂ්‍යයා/ශිෂ්‍යාව වෙත

මෙම සහතිකය ප්‍රදානය කරන ලදී.

.....	.....	.....
විදුහල්පති	ඩබ්.එම්.එන්.පේ. පුෂ්පකුමාර අධ්‍යාපන ප්‍රකාශන කොමසාරිස් ජනරාල්	එච්.එම්. ගුණසේකර ලේකම් අධ්‍යාපන අමාත්‍යාංශය

අධ්‍යාපන ප්‍රකාශන දෙපාර්තමේන්තුව, ඉසුරුපාය, බත්තරමුල්ල
2011. 12. 09

பாடசாலைப் பாடநூல்களைச் சிறப்பாகப் பயன்படுத்தும் வேலைத்திட்டம்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
கல்வி அமைச்சு
2011



இலங்கை சனநாயகச் சோசலிசக் குடியரசினால் இலவசமாக வழங்கப்படும் பாடநூல்களை மிகச் சிறப்பாகப் பயன்படுத்தியதன் மூலம் தேசிய சொத்தைப் பாதுகாப்பதில் பங்களித்தமைக்காக

..... பாடசாலையில் ..... தரத்தில்

கல்வி கற்கும்..... எனும்

மாணவனுக்கு / மாணவிக்கு இச்சான்றிதழ் வழங்கப்படுகின்றது.

.....
அதிபர்

.....
டபிள்யூ.எம்.என்.ஜே.புஷ்பகுமார
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்

.....
எச்.எம்.குணசேகர
செயலாளர்
கல்வி அமைச்சு

கல்வி வெளியீட்டுத் திணைக்களம், இசுருபாய, பத்தரமுல்ல
2011. 12. 09

ඇමුණුම 03

කේත අංකය :
குறியீட்டு இல :

කාර්යාලයීය ප්‍රයෝජනය සඳහා
அலுவலக உபயோகத்திற்காக

EPD/2012/01

පෙළපොත් ඇණවුම් ලේඛනය
பாடநூல் கோரல் படிவம்

2012

සෘජු බෙදා හැරීම්
நேரடி விநியோகம்

පළාත :.....
மாகாணம்

කලාපය :.....
வலயம்

ජාතික පාසල/සිසුන් 2000 ට වැඩි පාසල

தேசிய பாடசாலைகள் / மாணவர்கள் 2000ஐ விட கூடிய பாடசாலைகள்/:

.....

අධ්‍යාපන ප්‍රකාශන දෙපාර්තමේන්තුව
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

ඇමුණුම 04

කේත අංකය :
குறியீட்டு இல. :

කාර්යාලයීය ප්‍රයෝජනය සඳහා
அலுவலக உபயோகத்திற்காக

EPD/2012/02

පෙළපොත් ඇණවුම් ලේඛනය

பாடநூல் கோரல் படிவம்

මධ්‍යස්ථානය හරහා පෙළපොත් බෙදා හරින පාසල්

மத்திய நிலையங்களினூடாக பாடநூல் விநியோகிக்கப்படும் பாடசாலைகள்

2012

පළාත :.....
மாகாணம்

කලාපය :.....
வலயம்

කොට්ඨාසය :.....
கோட்டம்

මධ්‍යස්ථානය :.....
மத்திய நிலையம்

පාසල :.....
பாடசாலை

අධ්‍යාපන ප්‍රකාශන දෙපාර්තමේන්තුව
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

කේත අංකය :
குறியீட்டு இல. :

කාර්යාලීය ප්‍රයෝජනය සඳහා
அலுவலக உபயோகத்திற்காக



EPD/2012/03

මධ්‍යස්ථාන පෙළපොත් ඇණවුම් ලේඛනය
மத்திய நிலைய பாடநூல் கோரல் படிவம்

2012

පළාත
மாகாணம் :.....

කලාපය
வலயம் :.....

කොට්ඨාසය
கோட்டம் :.....

මධ්‍යස්ථානය
மத்திய நிலையம் :.....

අධ්‍යාපන ප්‍රකාශන දෙපාර්තමේන්තුව
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்